முற்பகல் 10-25

மாண்புமிகு உறுப்பினர் அந்த Breakwater-ஐ extend செய்ய வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்கள்கூட அதில் மிகவும் அக்கறை காட்டியுள்ளார்கள். எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மற்றும் மாவட்ட அமைச்சர் அவர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்றதன் காரணமாக, பெங்களூரிலே இருக்கின்ற CICEF என்று சொல்லக்கூடிய Central Institute of Coastal Engineering for Fishery-ஐ சார்ந்த உயர்மட்டக் குழு இன்றைக்கு அந்த வெட்டாறு பகுதியை ஆய்வு செய்கிறார்கள். அவர்கள் தருகின்ற அந்த ஆய்வறிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அதன் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

84—

சிப்காட் தொழிற்பேட்டை

***1871—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் புதிய சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்

2016 ஆகஸ்ட் 18]

அரசிடம் தற்சமயம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாரின் சிந்தனை, அண்ணாவின் அருந்தமிழ், மக்கள் திலகத்தின் மனிதநேயம் (மேசையைத் தட்டும் ஒலி) எதற்கும் அஞ்சா நெஞ்சுரம், ஈகைத்தாயின் இலக்கணம், அறிவுக்கு சாணக்கியனாய், வேகத்திற்கு சந்திரகுப்தனாய், மன உறுதிக்கு நெப்போலியனாய், வீரத்திற்கு ஜான்சிராணியாய், செங்கோலுக்குப் பாண்டியனாய், அனைத்து சமுதாயப் பற்றுக்கு நெல்சன் மண்டேலாவாய், ஈர உள்ளத்திற்கு அன்னை தெரசாவாய், எதிரிகளுக்கு சிம்மசொப்பனமாய் தமிழகத்தை வழிநடத்தும் தங்கத்தாரகை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.

கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் சுமார் 10,000 பேர் வேலைவாய்ப்பைத் தேடி அருகிலுள்ள சென்னை, திருப்பூர், கோவை, பெங்களூர் போன்ற பெருநகரங்களுக்குச் செல்கின்றனர். இவர்கள் அனைவரும் தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயின்றவர்கள் ஆவார்கள். தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக திருவண்ணாமலை மாவட்டம் விளங்கி வருவதால், மாவட்டத்தின் மையப் பகுதியாகத் திகழ்கின்ற கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கம் பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டையை ஏற்படுத்தினால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படவும், தொழில் வளம் பெருகவும், மக்களின் வாழ்வாதாரம் மென்மேலும் உயரவும் ஏதுவாக இருக்க வழி ஏற்படும். மேலும், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மற்றும் பழங்குடி மக்கள் வசிக்கும் ஜமுனாமரத்தூரில் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், நீர்ப்பொங்கல், தேன், புளி, சாமை, தினை, வரகு, கொள்ளு, எள்ளு, மா, பலா, வாழை மற்றும் மூலிகைப் பழங்கள் பெருமளவில் விளைகின்றன. எனவே, ஜமுனாமரத்தூர் பகுதியிலும் ஒரு சிப்காட் தொழிற்பேட்டையை ஆரம்பித்து, அதில் மேலே குறிப்பிட்டுள்ள

பொருட்களைப் பதப்படுத்துவதற்கான தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் அங்கு வசிக்கின்ற சுமார் 5 ஆயிரம் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெறுவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மேலும், இந்தப் பகுதியிலிருந்து அருகிலுள்ள அண்டை மாநிலங்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடி அவதியுறும் படித்த மலைவாழ் இளைஞர்களின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றிட மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையிலான அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனம், தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் தொடங்க ஏதுவாக தொழில் வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழில் பூங்கா, தொழில் வளாகங்கள், பூங்காக்களை மாண்புமிகு அம்மாவின் அரசு ஏற்படுத்தி வருகிறது. இதுவரை 12 மாவட்டங்களில் 20 தொழில் வளாகங்கள், பூங்காக்களை ஏற்படுத்தியுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் சிப்காட் நிறுவனத்தால் ஏற்கெனவே செய்யாறு பகுதியில் ஒரு தொழில் வளாகம் 631.52 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்தத் தொழில் வளாகத்தில் 9 தொழிற்சாலைகளுக்கு 619 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மேலும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னைக்கு அருகில் செய்யாறு இருப்பதனால், செய்யாறு தொழிற்பேட்டை விரிவாக்கத் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அதனடிப்படையில் சிப்காட் செய்யாறு தொழில் வளாகம் 2,300 ஏக்கர் நிலப்பரப்பில் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக இதுவரை 1,324 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டு, சிப்காட் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, நில எடுப்புக்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நில எடுப்புப்*

பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. சிப்காட் செய்யாறு தொழில் வளாக விரிவாக்கத் திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும் வகையில், கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட திருவண்ணாமலை மாவட்டம் முழுமையாக தொழில் தேவைக்குண்டான மனைத் தேவையினை முழுமையாகப் பூர்த்தி செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

85—

புதிய மாவட்டம்

***2398 திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். ஏற்கெனவே வருவாய்த் துறை நிலை ஆணையின்கீழ், புதிய மாவட்டம் அமைப்பதற்கென தனியாக, மக்கள் தொகை, வருவாய் கிராமங்கள், பரப்பளவு ஆகியவை எவ்வளவு இருக்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைகள் பூர்த்தியாகாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என்பதையும், இது அரசின் கொள்கை முடிவு என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.